மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.
முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.
2022ம் ஆண்டு ஜூலை திங்கள் 27ம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.05/2022
உள்
அசல் வழக்கு எண்.56/2018
-------------

1. மாரிச்சாமி
2. துரைச்சாமி (இறப்பு)
3. ஜெயமணி
4. ரெங்கநாயகி
5. ராமச்சந்திரன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சி.எம்.முகம்மது குஞ்சி
2. வட்டாட்சியர், சாத்தூர்
3. மாவட்ட வருவாய் அலுவலர்
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
4. நசீமா
5. ஆணையாளர் அவர்கள்
   சாத்தூர் நகராட்சி ஒன்றியம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
6. காளீஸ்வரி
7. கந்தசாமி
8. அர்ச்சனா ... உத்தேச மனுதாரர்கள்/
   உத்தேச 6 முதல் 8 வாதிகள்

இந்த மனு 02.12.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 17.07.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.இலட்சுமிகாந்தன் அவர்கள் ஆஜராகியும், 2, 3, 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதார்கள் தரப்பு எதிர்உரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 9 (2)-

ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், இறந்துபோன 2ம் வாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் வாதிகளாக சேர்த்து மனு தாக்கல் செய்வதில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 10.10.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

தாவா வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் வாதியான துரைச்சாமி என்பவர் 17.09.2020ம் தேதி அவருடைய மனைவி மற்றும் பிள்ளைகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அவர்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்க தனியாக மனு தாக்கல் செய்திருக்கிறார். மேற்படி 2ம் வாதி இறந்த காலம் கொரோன கட்டுப்பாடு காலமாக இருந்ததால் உடனடியாக வழக்கறிஞருக்கு தெரிவித்து வாரிசு சேர்க்க மனு தாக்கல் செய்ய முடியவில்லை. வாரிசு சேர்க்க கொடுத்திருக்கும் மனு 90 நாட்களுக்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும். இல்லாவிடில் தாவா வழக்கு அபேட் ஆகிவிடும். மேற்படி வழக்கில் மேற்படி குறிப்பிட்ட காலத்திற்குள் வாரிசுகளை சேர்த்து மனு தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி செயல் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாகும. எனவே, தாவா வழக்கில் 2ம் வாதியின் வாரிசுகளை சேர்ப்பதில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாவிடில் மனுதாரர்களுக்கு அநேக கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும். எனவே, 2ம் வாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் வாதிகளாக சேர்த்து மனு தாக்கல் செய்வதில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3). (2, 3, 5 **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இ.ம.எண்.05/2022ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை இ.ம.எண்.06/2022ல் ஏற்றுக்கொள்ளுமாறு மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது**) 2, 3, 5 **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இ.ம.எண்.05/2022ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்**

அசல் வழக்கானது நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் கண்ட 2ம் வாதி கடந்த 17.09.2020ம் தேதியில் இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளார். ஆனால் மேற்படியாரின் வாரிசுகளை அசல் வழக்கில் கட்சியாக சேர்க்க வேண்டி உரிய காலத்திற்குள்ளாக மனு தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு 604 நாட்கள் காலதாமதமாக மனு தாக்கல செய்துள்ளனர். மேற்படி மனு தாக்கல் செய்வதற்கான போதுமான காரணம் தெரிவிக்கவில்லை. வெறும் கொரோன காலகட்டம் என்று மட்டும் தெரிவித்துள்ளார்கள். ஆனால் கொரோனா காலகட்டம் 2021ல் நிறைவு அடைந்து விட்டதாலும், மனுதாரர் 2022ம் ஆண்டில் தான் மனு தாக்கல் செய்துள்ளார். அதனால் மனுதாரர் மனுவானது எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>7). தீர்வு:-</u>

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரர்களால் இறந்துபோன 2ம் வாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் வாதிகளாக சேர்த்து மனு தாக்கல் செய்வதில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 10.10.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த

மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில், மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக் கூடும். மேலும், இந்த வழக்கு சம்மந்தமாக வேறு வழக்குகளும் எழுக்கூடும். அதனால் காலவிரையம் மற்றும் இதர விரையங்களும் எழக்கூடும். மேலும் இவ்வழக்கில் இ.ம.எண்.04/2022 மனுவும் செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள், இ.ம.எண்.04/2022 மனு அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, இறந்துபோன 2ம் வாதியின் வாரிசுகளை அசல் வழக்கில் வாதிகளாக சேர்த்து மனு தாக்கல் செய்வதில் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்து மேற்படி வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 10.10.2022ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜூலை திங்கள் 27ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.